# ஆகஸ்ட் - 15- செவ்வாய்

### தூய கன்னி மரி அன்னையின் ஆரோபனம்

### “ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப் படுத்துகின்றது” லூக் 1:46

## முதல் வாசகம் : திருவெளிப்பாடு 11:19, 12:1 – 6,10

அப்பொழுது விண்ணகத்தில் கடவுளின் கோவில் திறக்கப்பட்டது. அந்தக் கோவிலில் உடன்படிக்கைப் பேழை காணப்பட்டது. மின்னலும் பேரிரைச்சலும் இடிமுழக்கமும் நிலநடுக்கமும் கனத்த கல்மழையும் உண்டாயின.வானில் பெரியதோர் அடையாளம் தோன்றியது பெண் ஒருவர் காணப்பட்டார் அவர் கதிரவனை ஆடையாக அணிந்திருந்தார் நிலா அவருடைய காலடியில் இருந்தது அவர் பன்னிரு விண்மீன்களைத் தலைமீது சூடியிருந்தார்.அவர் கருவுற்றிருந்தார் பேறுகால வேதனைப்பட்டுக் கடும் துயருடன் கதறினார்.வானில் வேறோர் அடையாளமும் தோன்றியது. இதோ நெருப்புமயமான பெரிய அரக்கப் பாம்பு ஒன்று காணப்பட்டது. அதற்கு ஏழு தலைகளும் பத்துக் கொம்புகளும் இருந்தன. அதன் தலைகளில் ஏழு மணி முடிகள் இருந்தன.அது தன் வாலால் விண்மீன்களின் மூன்றில் ஒரு பகுதியை நிலத்தின்மீது இழுத்துப் போட்டது. பேறுகால வேதனையிலிருந்த அப்பெண் பிள்ளை பெற்றவுடன் அதை விழுங்கிவிடுமாறு அரக்கப் பாம்பு அவர்முன் நின்று கொண்டிருந்தது.எல்லா நாடுகளையும் இருப்புக்கோல் கொண்டு நடத்தவிருந்த ஓர் ஆண் குழந்தையை அவர் பெற்றெடுத்தார். அக்குழந்தையோ கடவுளிடம் அவரது அரியணை இருந்த இடத்துக்குப் பறித்துச் செல்லப்பெற்றது. அப்பெண் பாலைநிலத்துக்கு ஓடிப்போனார் அங்கு ஆயிரத்து இருநூற்று அறுபது நாள் அவரைப் பேணுமாறு கடவுள் அவருக்கென ஓர் இடத்தை ஏற்பாடு செய்திருந்தார்.பின்பு விண்ணகத்தில் ஒலித்த பெரியதொரு குரலைக் கேட்டேன். அது சொன்னது ”இதோ, மீட்பு, வல்லமை, நம் கடவுளின் ஆட்சி, அவருடைய மெசியாவின் அதிகாரம் ஆகிய அனைத்தும் வந்துவிட்டன. நம் சகோதரர் சகோதரிகள் மீது குற்றம் சுமத்தியவன், நம் கடவுள் திருமுன் அல்லும் பகலும் அவர்கள்மீது குற்றம் சாட்டியவன் வெளியே தள்ளப்பட்டான்.

**பதில்பாடல்:** ஓபீரின் பொன் அணிந்து வலப்புறம் நிற்கின்றாள் பட்டத்து அரசி

## இரண்டாம் வாசகம்: 1 கொரிந்தியர் 15: 20 – 27

சகோதர சகோதரிகளே! , இறந்த கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டார். அவரே முதலில் உயிருடன் எழுப்பப்பட்டார். இது அனைவரும் உயிருடன் எழுப்பப்படுவர் என்பதை உறுதிப்படுத்துகிறது. ஒரு மனிதர் வழியாகச் சாவு வந்ததுபோல ஒரு மனிதர் வழியாகவே இறந்தோர் உயிர்த்தெழுகின்றனர். ஆதாமை முன்னிட்டு அனைவரும் சாவுக்குள்ளானது போலக் கிறிஸ்துவை முன்னிட்டு அனைவரும் உயிர் பெறுவர். ஒவ்வொருவரும் அவரவர் முறை வரும்போது உயிர்பெறுவர். கிறிஸ்துவே முதலில் உயிர்பெற்றார். அடுத்து, கிறிஸ்துவின் வருகையின்போது அவரைச் சார்ந்தோர் உயிர் பெறுவர். அதன்பின்னர் முடிவு வரும். அப்போது கிறிஸ்து ஆட்சியாளர், அதிகாரம் செலுத்துவோர், வலிமையுடையோர் ஆகிய அனைவரையும் அழித்துவிட்டு, தந்தையாகிய கடவுளிடம் ஆட்சியை ஒப்படைப்பார். எல்லாப் பகைவரையும் அடிபணியவைக்கும் வரை அவர் ஆட்சி செய்தாக வேண்டும்.சாவே கடைசிப் பகைவன், அதுவும் அழிக்கப்படும். ஏனெனில், ”கடவுள் எல்லாவற்றையும் அவருக்கு அடிபணியச் செய்தார். ”ஆனால் எல்லாம் அடிபணிந்தன என்று சொல்லும்போது அனைத்தையும் கிறிஸ்துவுக்கு அடிபணிய வைக்கும் கடவுளைத் தவிர மற்றவை யாவும் அடிபணிந்தன என்பது தெளிவாகிறது.

## நற்செய்தி : லூாக்கா 1: 39 – 56

அக்காலத்தில் மரியா புறப்பட்டு யூதேய மலைநாட்டிலுள்ள ஓர் ஊருக்கு விரைந்து சென்றார்.அவர் செக்கரியாவின் வீட்டை அடைந்து எலிசபெத்தை வாழ்த்தினார்.மரியாவின் வாழ்த்தை எலிசபெத்து கேட்டபொழுது அவர் வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று. எலிசபெத்து தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டார்.அப்போது அவர் உரத்த குரலில், ”பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர் உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசிபெற்றதே!என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்?உம் வாழ்த்துரை என் காதில் விழுந்ததும் என் வயிற்றினுள்ளே குழந்தை பேருவகையால் துள்ளிற்று.ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்” என்றார். அதைக்கேட்ட மரியா பின்வருமாறு கூறினார். ”ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப் படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது. ஏனெனில் அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார். இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர்.ஏனெனில் வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார். தூயவர் என்பதே அவரது பெயர்.அவருக்கு அஞ்சி நடப்போருக்குத் தலைமுறை தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டி வருகிறார்.அவர் தம் தோள் வலிமையைக் காட்டியுள்ளார் உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரைச் சிதறடித்து வருகிறார். வலியோரை அரியணையினின்று தூக்கி எறிந்துள்ளார் தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார்.பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார் செல்வரை வெறுங்கையராய் அனுப்பிவிடுகிறார்.மூதாதையருக்கு உரைத்தபடியே அவர் ஆபிரகாமையும் அவர்தம் வழி மரபினரையும் என்றென்றும் இரக்கத்தோடு நினைவில் கொண்டுள்ளார். தம் ஊழியராகிய இஸ்ரயேலுக்குத் துணையாக இருந்து வருகிறார்”.மரியா ஏறக்குறைய மூன்று மாதம் எலிசபெத்தோடு தங்கியிருந்த பின்பு தம் வீடு திரும்பினார்.

**தியானம்:** இன்று மரியன்னையின் விண்ணேற்பு விழாவை திருச்சபை கொண்டாடுகின்றது. மறிதராக பிறந்தவர்களில் உடலோடும் ஆன்மாவோடும் விண்ணிற்கு எடுத்துக் கொள்லப்பட்டவர் அன்னை மரியா. அவரின் வாழ்வு சுகமானதல்ல. திருமணமாகமல் கருத்தரித்தத்தனால் சமூகத்தால் ஏளனமாக பார்க்கப் பட்டார். நிறைமாத கர்ப்பிணியாக பயணம் செய்தார். குழந்தை பிறக்க இடமின்றி தவித்தார். மாட்டுத்தொழுவத்தில் குழந்தையை பெற்றெடுத்தார். ஏரோதிடம் இருந்து குழந்தையை காப்பாற்ற இரவோடு இரவாக ஓடினார். அன்னா, சிமியோனின் வார்த்தைகளால் மன வேதனை அடைந்தார். 12 வயதில் காணாமல் போன தம் மகனை தேடி அலைந்தார். இறுதியில் சிலுவைச் சாவிற்கு மகனை ஒப்புக்கொடுத்து வியாகுலத்தாயாகினாள். இன்றும் எத்தனையோ தாய்மாரின் கண்ணீர்க்கதையை நாம் கேட்கிறோம். அப்பொதெல்லாம் வியாகுலத்தின் தாய் நம்முடன் இருக்கின்றார். யேசுவின் ஒவ்வொரு படிநிலையிலும் அவரோடு பயணம் செய்தவர் அன்னை மரியா மட்டுமே. இன்று சிலர் அவரை வணங்குவதை ஏளனமாகப் பார்க்கிறார்கள். பெற்றெடுத்தவர் என்றும் போற்றுதற்குரியவரே! இதனை நாம் மறந்து விடக் கூடாது. அவரை வணங்குவதையோ, ஆராதிப்பதையோ தரக்குறைவாக எண்ண வேண்டாம்.